# பொதுக்காலம் 20ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

பிரியமானவர்களே! பொதுக்காலம் 20ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடனே அழைக்கிறோம்.

ஊரோடு ஒத்துப்போக கற்றுக் கொடுக்கின்ற உலகமிது. ஊராரோடு ஒத்துப் போனால் பாதுகாப்பு எனக் கருதும் உலகமிது. யாரும் எப்படியும் போகட்டும், என் தலையில் மண் விழாதவரை எனக்கு கவலையில்லை, பாதகம் இல்லை எனக் கணக்கு போட்டு வாழும் மக்கள் கூட்டமே அதிகம். இதுவா வாழ்வு! இதுவா நம் பிறப்பின் அர்த்தம்? இதுவா மறை தரும் போதனை?

காந்தி மகாத்மா ஆனார். கருப்பின தலைவரானார் நெல்சன் மண்டேலா, கியூபா சுதந்திர நாடானது, அப்துல்கலாம் இளையோருக்கு மாதிரியானார், தாழ்ச்சியின் சிகரமானார் மரியா, நேர்மைக்கு மாதிரியானார் வளனார், வீரத்தை வெளிப்படுத்தினார் திருமுழுக்கு யோவான், மாற்றத்திற்கு மாதிரியானார் பவுல்.

இவ்வாறு பலருடைய வாழ்வும் பாடமானது நமக்கு என்றால், ஏதோ வாழ்ந்தோம், மரித்தோம் என்று இல்லாமல், தாங்கள் ஏற்ற கொள்கையை, தங்கள் வாழ்வின் படிப்பினையை வாழ்வாக்கி நின்று, போராடி, வெற்றியோ, தோல்வியோ வீர மகனுக்கு அழகு என்று வாழ்ந்தாலேயே ஆகும்.

வாழ்வது ஒருமுறை, வாழ்த்தட்டும் தலைமுறை என வீர வசனம் பேசியும், கேட்டும் வாழும் நம் வாழ்வு தனிப்பட்ட முத்திரையைப் பதித்துப் போகின்றதா எனக் கேட்டுப் பார்க்க அழைக்கின்றது இறைவார்த்தை.

இறை நம்பிக்கையாளர்களின் வாழ்வும் தனித்து விடப்பட்ட வாழ்வல்ல. இறைவாக்கினர்கள் வாழ்வில் நாம் பார்ப்பது, தாவீது இறைப்பணியாளர் சொல்வது போல உதவிட இறைவன் தாமே துணையாக வருகின்றார்.

இயேசுவின்மீது கண்களைப் பதிய வைத்து, நம்பிக்கையோடும், மன உறுதியோடும் பயணிக்க அழைக்கப்படுகின்றோம்.

நம்முடைய வாழ்வின் தனித்தன்மையைக் கண்டுணர்ந்து, சமூக விடுதலையின் அக்கறையோடு, இறை துணை என்றும் நமக்கு உண்டு என்று உணர்வு பெற்று வாழ வரம் வேண்டிக் கல்வாரிப் பலியில் பங்கேற்போம், வாழ்வை அர்த்தமுள்ளதாக்க வரம் வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை (எரேமியா 38: 4-6, 8-10)

எரேமியா இறைவாக்கினர் எதிர்க்கப்படும் அறிகுறியாக இருந்து செயல்பட்டார். உண்மையான இறைவாக்கினர் தன்மயமாக வாழாமல் தன்னை அனுப்பினவரின் வார்த்தையை துணிவு கொண்டு எடுத்துச் சொல்லி, அதற்கான பரிசாக தன் உயிரையே விலை கொடுத்து வாழ்ந்திட வேண்டும், இத்தகையோர்களுக்கு இறைவனே துணை என்று கூறும் வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை (எபிரேயர் 12: 1-4)

பாவத்திற்கு எதிரான போராட்டம் காலம் காலமான ஒன்று. காலத்தோடேயே அந்தப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும், அதற்காக இரத்தம் சிந்தவும் துணிவு வேண்டும். இத்தகைய போராட்டத்தில் நம் கண்களை இயேசுவின் மீதே பதிய வைத்து, அவர் நம் பொருட்டு தீமைக்கான போராட்டத்தில் பட்ட பாடுகளைத் தியானித்து பயணிக்க வேண்டும் என்று கூறும் எபிரேயருக்கு எழுதப்பட்ட மடலின் வார்த்தைகளுக்குச் செவிகொடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. வழிநடத்துபவரே எம் இறைவா!

பயணிக்கும் எம் திரு அவையை உம் வழியாகப் பொறுப்பேற்று வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவிகள் தங்கள் தனித்தன்மையைப் போற்றி, எழுச்சிமிக்க வழியிலே திரு அவையை வழிநடத்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. வழிநடத்துபவரே எம் இறைவா!

நாட்டை ஆளப் பொறுப்பேற்றிருக்கும் அதிகாரிகள், அரசியல்வாதிகள் தங்கள் கடமையை மறந்து, உரிமையை நிலைநாட்டாது, உரிமையைப் போலவே கடமையையும் தங்களது கண்களாகப் போற்றிப் பணியாற்றிட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. வழிநடத்துபவரே எம் இறைவா!

பலியிலே பங்கெடுத்து பயன்பெறும் நம்பிக்கையாளர்களாகிய நாங்கள் ஒவ்வொருவரும் எங்களது சிறப்புமிக்க தனித்துவத்தை உணர்ந்து செயலாற்றி, உறுதி கொண்ட நெஞ்சத்துடனே சான்று பகர்ந்திட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. வழிநடத்துபவரே எம் இறைவா!

நேர்மை, உண்மை, நீதியை நிலைநாட்டும் வேட்கை கொண்ட மக்களாக நாங்கள் வாழும் இக்காலத்தில் பயணித்து கோழைகளாக அல்லாமல், இடர்கள், இன்னல்களில் எம்மை மீட்க எம்மோடு பயணிக்கின்றீர் என்ற மன உறுதியைப் பெற்றிட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. வழிநடத்துபவரே எம் இறைவா!

நீதிக்கு, உண்மைக்கு குரல் கொடுத்து, நேர்மையோடு வாழ்ந்து, தங்களது தனித்துவமிக்க வாழ்வால் உமக்கு சான்று பகர்ந்து மரித்த உள்ளங்களுக்கு நீர் ஆயத்தப்படுத்தியுள்ள வான்வீட்டில் இடமளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com